**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 206/2024**

**Deposition of P.W.** 1

Name : திரு. ராஜேந்திரன்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated: 26.11.2025

Accused Present.

<u>முதல் விசாரணை</u>–

நான் கிராம நிர்வாக அதிகாரியாக பணியாற்றி ஓய்வு பெற்று தற்போது சென்னையில் வசித்து வருகிறேன். இதற்கு முன்னர் இவ்வழக்கு சமயத்தில் மேக்கோடு கிராம நிர்வாக அதிகாரியாக பணியாற்றி வந்தேன். 31.05.2011ம் தேதி தக்கலை கோட்டாட்சியர், மற்றும் வட்டாட்சியர், வேளிமலை கிராம நிர்வாக அதிகாரி, தக்கலை கிராம நிர்வாக அதிகாரி. மற்றும் கிராம உதவியாளர்களும் காயல்கரை, புலிக்கூடு என்ற இடத்தில் உள்ள சர்வே எண்.866/2, 854/1, 854/7, 854/1, 854/1,2 ஆகிய புல எண்களில் உள்ள பாறை எடுக்கும் இடங்களில் ஆய்வு செய்தார்கள். சட்ட விரோதமாக அங்கு பாறை உடைத்து கொண்டிருந்தார்கள். விசாரித்ததில் அவர்கள் பெயர்களை சொன்னார்கள் எனக்கு தற்போது 71 வயது ஆகி விட்டதால் ஞாபகமில்லை. கோட்டாட்சியர் உத்தரவு படி நான்

கொற்றிக்கோடு காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அது அ.சா.ஆ.1. புகார் மனுவுடன் நடைச்சீட்டு மற்றும் டெட்டனேட்டர் குச்சி ஆகியவற்றையும் ஒப்படைத்தேன். நான் மேலே குறிப்பிட்டுள்ள புல எண்கள் யாருக்கு சொந்தமானது என்று எனக்கு ஞாபகமில்லை. காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

சம்பவ நாளில் புலிக்கூடு பகுதியில் உள்ள நிறைய இடங்களுக்கு ஆய்விற்கு சென்றோம். எத்தனை இடங்களுக்கு சென்றோம் என்று ஞாபகமில்லை. மொத்தம் 15 பேர் போனோம். புகாரில் 15 பேர் போனதாக குறிப்பிடவில்லை. புலிக்கூடு பகுதி எனது கிராம எல்கைக்குள் அமைந்தது தான். அந்த பகுதியிலுள்ள எந்தெந்த குவாரிகளுக்கு அனுமதி இருந்தது என்று எங்கள் கிராம நிர்வாக அலுவலகத்தில் இருக்கும். நாங்கள் ஆய்வு செய்த குவாரியும் அரசு அனுமதியுடன் இயங்கிய குவாரி தான். ஆனால் ஆய்வு செய்த போது உரிமம் முடிந்து விட்டது. எந்த தேதியில் உரிமம் முடிந்தது என்று எனக்கு ஞாபகமில்லை. நான் குறிப்பிட்டள்ள புல எண்கள் யாருக்கு சொந்தமானது என்று புகாரில் குறிப்பிடவில்லை. எதிரிகளின் பெயர்களை அங்கு வேலை பார்த்தவர்கள் சொன்னார்கள். வேலை பார்த்தவர்களின் பெயர்களை நான் விசாரிக்கவில்லை. காலை 06.00 மணிக்கு தக்கலையிலிருந்து புறப்பட்டு ஆய்விற்கு போனோம். தக்கலையிலிருந்து – புலிக்கூடு 30 கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். யார், யாரிடம் எவ்வளவு பொருட்கள் கைப்பற்றினோம் என்று புகாரில் குறிப்பிடவில்லை. நாங்கள் செல்லும்

போது எதிரிகள் சம்பவ இடத்தில் இல்லை. சாலை ஓரத்தில் வெடிபொருட்கள் கிடைத்தது என்றால் சரியல்ல. பாறை உடைக்கும் இடத்தில் தான் கிடைத்தது. வெடிபொருட்கள் கையாளுவது தொடர்பாக நான் பயிற்சி பெறவில்லை. வெடிபொருட்களை கைப்பற்றுவதற்கு எனக்கு அதிகாரம் இல்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் கோட்டாட்சியர் இருந்ததால் அவர் உத்தரவு படி வெடிபொருட்களை எடுத்து கொடுத்தேன். பொய்யாக புள்ளிவிபர கணக்கிற்காக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. உண்மையில் வெடிபொருட்களை எடுத்திருந்தால் உடனடியாக போலீசாருக்கு தகவல் கொடுத்திருப்பேன் என்றால் சரிதான். புகார் கொடுக்கும் போது தான் பொருட்களை போலீசாரிடம் ஒப்படைத்தேன். இடைப்பட்ட நாட்களில் வெடிபொருட்களை கோட்டாட்சியர் அலுவலகத்தில் வைத்திருந்தோம் அந்த விபரத்தை புகாரில் தெரிவிக்கவில்லை. எதிரிகள் மீது பொய்யாக போடப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல.

**<u>5வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலீசார் என்னை விசாரிக்கவில்லை. பாறை உடைத்து கொண்டிருந்த நபர்கள் எதிரிகளின் பெயர்களை கூறியதாக புகாரில் தெரிவிக்கவில்லை. பாறை துண்டுகளையும் கரிமருந்தையும் கைப்பற்றி ஒப்படைக்கவில்லை. சம்பவ நாளில் புகார் கொடுக்கவில்லை. பாறை உடைக்கப்பட்ட விபரத்தை கனிமவள துறைக்கு நான் தெரிவிக்கவில்லை. கனிமத்துறையிலிருந்து யாராவது விசாரித்தார்களா என்று எனக்குத் தெரியாது. புகார் மனு கொடுக்கும் போது கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் ஆகியவர்கள் என்னுடன் வரவில்லை. பாறைகள் யாருக்கு

சொந்தமானது என்று ஆவணங்களை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை. சம்பவத்திற்கு முன்னர் உரிமத்துடன் குவாரி செயல்பட்டது என்றால் சரிதான். அதற்கு சாலை அமைக்கப்பட்டு டெம்போ போன்ற வாகனங்கள் சென்று வந்தது என்றால் சரிதான். நான் சொன்னது போல் சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல. 5வது எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல. புள்ளி விபரத்திற்காக போடப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல.

<u>6வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

புகாரில் யாரை விசாரித்து எதிரிகள் பெயரை தெரிந்து கொண்டேன் என்று குறிப்பிடவில்லை. 31.05.2011ம் தேதி நடைபெற்ற சம்பவத்திற்கு 04.06.2011ம் தேதி புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். புகாரை 5 நாட்கள் காலதாமதமாக கொடுக்க என்ன காரணம் என்று குறிப்பிடவில்லை. சம்பவ இடத்தில் கல் உடைத்து கொண்டிருந்தவர்களை பிடித்து காவல்நிலையத்தில் ஒப்படைக்கவில்லை. நானோ, எனது அதிகாரிகளோ போலீசாருக்கு தகவல் சொல்லி வெடிகுண்டு செயலிழக்க செய்யும் போலீசாரை வரவழைக்கவில்லை. நடைசீட்டு கைப்பற்றியதற்கு சம்பவ இடத்தில் வேறு ஆவணங்கள் எதுவும் தயார் செய்யவில்லை. டெட்டனேட்டரை நான் கைப்பற்றவில்லை. 6வது எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.

<u>7வது எதிரி தரப்புகுறுக்கு விசாரணை</u>

நான் சம்பவ சமயம் மேக்கோடு கிராம நிர்வாக அதிகாரியாக பணியாற்றியதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை. என்னுடன் வந்த அதிகாரிகளுக்கும் சம்பவம் பற்றி தெரியும். நான் சொன்ன புல

எண்கள் யாருடைய சொத்து, அதில் கனிம வளங்கள் இருப்பதை காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. பாறை உடைக்க அனுமதி முடிந்ததை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை. எந்த பகுதியில் பாறை உடைக்கப்பட்டது என்பதை காட்ட அளந்து அறிக்கை தாக்கல் செய்யவில்லை. புலிக்கூடு என்ற இடத்திலிருந்து கொற்றிக்கோடு காவல்நிலையம் 3 கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். நான் நடைசீட்டுகள் எதையும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. 7வது எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

<u>8வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

கனிம வளத்துறை சம்மந்தமான இடங்களை ஆய்வு செய்ய யாருக்கு அதிகாரம் உள்ளது என்ற ஆவணம் எங்களிடம் இல்லை. கனிமவளத்துறை இடங்களை ஆய்வு செய்ய எனக்கு அதிகாரமில்லை. கோட்டாட்சியர் எனக்கு வழங்கிய உத்தரவை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. கோட்டாட்சியர் வாய்மொழியாக உத்தரவு கொடுத்தார். என்னுடன் உயரதிகாரிகள் வந்தார்கள் என்பதற்கு புகாரை தவிர வேறு ஆவணங்கள் இல்லை. கனிமவளத்துறை சம்மந்தப்பட்ட இடங்களை ஆய்வு செய்ய கனிமவள அதிகாரிக்கு மட்டும் அதிகாரம் உள்ளது என்றால் சரியல்ல. நான் ஆய்வு அறிக்கை தயார் செய்யவில்லை. நடைசீட்டு கனிமவளத்துறையால் வழங்கப்பட்டது என்றால் சரிதான். 8வது எதிரியை யார் சொன்னார்கள் என்று நான் இவ்வழக்கில் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. எந்த சர்வே எண்ணுக்கு குவாரி அனுமதி வழங்கப்பட்டது என்ற விபரங்கள் எனது புகாரில் இல்லை என்றால் சரிதான். நான் சம்பவ

இடத்திற்கு சென்றதை காட்ட கனிமவளத்துறைக்கோ, மாவட்டஆட்சியருக்கோ அறிக்கை அனுப்பவில்லை. கோட்டாட்சியர் என்னுடன் வந்ததால் நான் அறிக்கை கொடுக்க வேண்டிய அவசியமில்லை. என்னுடன் அதிகாரிகள் யாரும் வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. வெடிபொருள் சட்டப்படி அரசு அனுமதி பெறப்படவில்லை என்று சொன்னால் சரிதான். 8வது எதிரியை பொய்யாக வழக்கில் சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல. கனிமவளம் அனுமதி பெற்று பாறை உடைக்கும் போது வெடிபொருட்களை பயன்படுத்த உரிமை உள்ளது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது.

**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**
**CASE NO.SC. 206 /2024**

**Deposition of P.W.2**

Name : ஜாண்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**Dated: 26.11.2025**

Accused Present.

முதல் விசாரணை–

நான் சித்திரங்கோட்டில் வசித்து வருகிறேன். நான் பால்வெட்டும் தொழில் செய்து வருகிறேன். அ.சா.1ஐ எனக்குத் தெரியாது. இன்று ஆஜராகியுள்ள எதிரிகளை எனக்குத் தெரியாது. சம்பவம் பற்றி நான் பார்க்கவில்லை. போலீசார்ள ன்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அனுமதிக்க கோரி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

31.05.2011ம் தேதி காலை06.00 மணிக்கு நான் வேலைக்கு சென்ற போது புலிக்கூடு என்ற இடத்தில் எதிரிகள் பொறை உடைத்து கொண்டிருந்ததாகவும் அதனை அரசு அதிகாரிகள் ஆய்வு செய்ததாகவும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

எதிரிகள் தரப்பில் சாட்சியிடம் குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டது.